தங்கமுருகன் ஜுவல்லர்ஸ் A/c
267, மெயின்ரோடு நகைக்கடை பஜார், சங்கரன்கோவில்
97893 91528 - 96299 64324

சக்கர வியூகம்
SAKKRA VIYUGAM
புலனாய்வு நாளிதழ்
"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"

FLY TOWARDS
DIGITAL INNOVATION
Services / சேவைகள்
✓DIGITAL MARKETING
✓WEB DEVELOPMENT
✓SOFTWARE DEVELOPMENT
9080999823
7695883647
வடக்கு ரத வீதி, சங்கரன்கோவில்

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

VOLUME : 01 | ISSUE: 310 | 03.05.2026 | SUNDAY | CHITHIRAI: 20 | PRICE : RS.5/-

மலர் : 01 | இதழ் : 310 | 03.05.2026 | ஞாயிற்றுக்கிழமை | சித்திரை : 20 | விலை : ரூ.5/-

## "மேற்கு வங்கத்தில் திரிணமூல் காங்கிரஸ் 200+ இடங்களில் வெல்லும்"

# "மம்தா பானர்ஜி நம்பிக்கை"

கொல்கத்தா: மே.3-

மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலில் 200க்கும் மேற்பட்ட இடங்களில் வெற்றி பெற்று திரிணமூல் காங்கிரஸ் ஆட்சி அமைக்கும் என்று அக்கட்சியின் தலைவரும், முதல்வருமான மம்தா பானர்ஜி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

மேற்கு வங்கத்தில் மொத்தமுள்ள 294 தொகுதிகளுக்கு ஏப்ரல் 23, 29 ஆகிய இரண்டு கட்டங்களாக தேர்தல் நடைபெற்றது. இந்த தேர்தலில் பதிவான வாக்குகள் நாளை மறுநாள் (மே 4) எண்ணப்பட உள்ளன. இதை முன்னிட்டு, திரிணமூல் காங்கிரஸ் முகவர்களுடன் காணொளிக் காட்சி மூலம் மம்தா பானர்ஜி உரையாற்றினார்.

அப்போது அவர், "இந்த தேர்தலில் நாம் வெற்றிபெறப் போகிறோம். அதுவும், 200க்கும் மேற்பட்ட தொகுதிகளில் நாம் வெற்றி பெறப் போகிறோம்.



தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகள், பங்குச் சந்தையை கையாளும் ஒரு முயற்சியே அன்றி வேறில்லை. அவர்கள் 2021, 2024 தேர்தல்களின்போதும் இதைச் செய்தார்கள். இப்போதும் அதைச் செய்துள்ளார்கள்.

தேர்தல் பணிகளில் ஈடுபட்ட திரிணமூல் காங்கிரஸ் தொண்டர்கள் பலர் மீது மத்திய ஆயுதக் காவல் படைகள் கொடூர தாக்குதல்களை நடத்தின. மத்திய ஆயுதக் காவல் படைகளின் கொடூரத்தை எதிர்கொண்டவர்களுக்கு வரும் நாட்களில் கட்சி வெகுமதி அளிக்கும்" எனத் தெரிவித்தார்.

இரண்டாம் கட்ட தேர்தலின்போது வாக்காளர்கள் வாக்களிக்க முடியாதவாறு தடுக்கப்பட்டதாக பாஜக அளித்த புகாரின் பேரில், இரண்டு தொகுதிகளில் 15 வாக்குச்சாவடிகளில் இன்று மறு தேர்தல் நடத்தப்பட்டது. இதில், பிற்பகல் மூன்று மணி வரை 72.43% வாக்குகள் பதிவாகின.

தேர்தலுக்குப் பிந்தைய கருத்துக் கணிப்புகள்: மேட்ரிஸ் நிறுவனம் வெளியிட்ட கருத்துக் கணிப்பில் மேற்கு வங்கத்தில் பாஜக 146 முதல் 161 இடங்களையும், திரிணமூல் காங்கிரஸ் 125 முதல் 140 இடங்களையும் கைப்பற்றும் என தெரிவித்துள்ளது.

பிமார்க் நிறுவனம் வெளியிட்ட கருத்துக் கணிப்பில் பாஜக அணி 150 முதல் 175 இடங்களையும், திரிணமூல் காங்கிரஸ் 118 முதல் 138 இடங்களையும் கைப்பற்றும் என தெரிவித்துள்ளது. பீப்பிள்ஸ் பல்ஸ் நிறுவனம் வெளியிட்ட கருத்துக் கணிப்பில் திரிணமூல் காங்கிரஸ் 177 முதல் 187 இடங்களையும், பாஜக அணி 95 முதல் 110 இடங்களை கைப்பற்றும் என தெரிவித்துள்ளது.

## 'உழைக்கும் மக்களுக்கு எதிரான தாக்குதல்'
## வணிக சிலிண்டர் விலை உயர்வுக்கு இந்திய கம்யூ கண்டனம்

சென்னை, மே.04-

"வணிக பயன்பாட்டு சமையல் எரிவாயு சிலிண்டர் விலையை மத்திய அரசு உயர்த்தியுள்ளது, உழைக்கும் மக்களுக்கு எதிரான தாக்குதலாகும்" என்று இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் சாடியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "கடந்த பிப்ரவரி 28ஆம் தேதியன்று ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் ராணுவம் தாக்குதல் நடத்தியதை தொடர்ந்து எரிபொருள் போக்குவரத்தில் தடை ஏற்பட்டுள்ளது. அமெரிக்கா, இஸ்ரேல் கூட்டணியின் அடாவடி தாக்குதலால் மேற்காசிய நாடுகளில் ஏற்பட்ட கடுமையான பதற்ற நிலை தொடர்கிறது.

இதனால், இந்தியாவின் எரிபொருள் சந்தை வரலாறு காணாத நெருக்கடிக்கு நெட்டித் தள்ளப்பட்டுள்ளது. கடந்த மூன்று மாதங்களாக, இந்திய அரசுக்கு சொந்தமான எரிபொருள் எண்ணெய் நிறுவனங்கள் சமையல் எரிவாயு சிலிண்டர் விலைகளை தொடர்ந்து உயர்த்தி வருகின்றன.

இதன் தொடர்ச்சியாக நேற்று முதல் வணிக எரிவாயு சிலிண்டர் (19 கிலோ) ஒன்றுக்கு தலா ரூ.993 உயர்த்தியுள்ளது. இதனால், வணிக எரிவாயு சிலிண்டர் விலை ரூ.3,237 ஆக உயர்ந்து, சிறு, குறு



வணிகர்களின் கைகளுக்கு எட்டாப் பொருளாகிவிட்டது.

இதன் காரணமாக ஆயிரக்கணக்கான உணவகங்கள், தேநீர் உள்ளிட்ட பலகாரக் கடைகள் மூடப்பட்டுள்ளன. வணிக நிறுவனங்கள் செயலிழந்து வரும் துயரம் தீவிரமாகி வருகின்றது. இதன் விளைவாக கடுமையான விலை உயர்வுச் சுமை மக்கள் தலையில் ஏற்றப்பட்டுள்ளது.

தேநீர் தொடங்கி அனைத்து உணவுப் பொருட்களின் விலைகளும் 20 முதல் 50 விழுக்காடு வரை உயர்ந்துள்ளது. வீட்டு பயன்பாட்டிற்கான எரிவாயு சிலிண்டர் விலையும் அதிகரித்துள்ளது. அத்துடன், சிலிண்டர் தேவைக்கு பெறுகிற நிலை தடுக்கப்பட்டு, ஊரகப் பகுதிகளில் 45 நாட்களுக்கு ஒரு முறையும், நகரப் பகுதிகளில் 25 நாட்களுக்கு ஒரு முறையும் தான் பதிவு செய்ய வேண்டும் என்ற நிபந்தனைகளும் விதிக்கப்பட்டுள்ளன.

மக்கள் நலனை பேணுவதாக வாயில் நுரை தள்ள பேசி வரும் பிரதமர் மோடியும் அவரது அமைச்சர்களும், ஒன்றிய அரசும் அமெரிக்க அரசின் தலைவர் ட்ரம்ப் அனுமதி கேட்டு காத்துக் கிடப்பது வெட்கக்கேடானது. நாட்டின் பாரம்பரியம் மிக்க அணிசேரா அயலுறவுக் கொள்கைக்கு எதிரானது.

சமையல் எரிவாயு சிலிண்டர் விலைகளை தொடர்ந்து உயர்த்தி வரும் ஒன்றிய பாஜக அரசின் மக்கள் விரோத நடவடிக்கையை இந்தியக் கம்யூனிஸ்டு கட்சி வன்மையாகக் கண்டிப்பதுடன், இந்தியாவில் இருந்து வெளிநாடுகளுக்கு எரிபொருள் ஏற்றுமதி செய்யும் பெரும் குழும நிறுவனங்களுக்கு ஆதரவாக கலால் வரியை குறைத்துள்ளது.

ஆனால் உள்நாட்டில் சாமானிய மக்களின் வீட்டு உபயோக, வணிக பயன்பாட்டு சமையல் எரிவாயு சிலிண்டர் விலைகளை ஒன்றிய அரசு உயர்த்தியுள்ளது. இது உழைக்கும் மக்களுக்கு எதிரான தாக்குதலாகும். இந்த விலை உயர்வை திரும்பப் பெற வேண்டும் என இந்தியக் கம்யூனிஸ்டு கட்சியின் தமிழ்நாடு மாநில செயற்குழு, ஒன்றிய அரசை வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது" என்று அவர் தெரிவித்துள்ளார்.

## "சமையல் எரிவாயு விலை உயர்வை மத்திய அரசு உடனே திரும்பப் பெற வேண்டும்"

சென்னை, மே.04-

வணிகப் பயன்பாட்டுக்கான சமையல் எரிவாயு விலை உயர்வு பொதுமக்களை கடுமையாக பாதிக்கும் என்பதால், மத்திய அரசு இந்த விலை உயர்வை உடனடியாக திரும்பப் பெற வேண்டும் என மதிமுக பொதுச்செயலாளர் வைகோ வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், "வணிக பயன்பாட்டுக்கான 19 கிலோ எடை கொண்ட சமையல் எரிவாயு சிலிண்டர் கடந்த மார்ச் மாதம் ரூ.144 ரூபாயும், ஏப்ரல் மாதம் 203 ரூபாயும் உயர்த்தப்பட்டது. இந்த நிலையில், நேற்று மே 1ஆம் தேதி சிலிண்டர் விலை 993 ரூபாய் உயர்த்தப்பட்டு 3,239 ரூபாயாக விற்பனை



விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

அமெரிக்க ஈரான் போரால் பன்னாட்டு சந்தையில் கச்சா எண்ணெய் விலை உயர்வை காரணம் காட்டி ஒன்றிய பாஜக அரசு வணிக பயன்பாட்டுக்கான சமையல் எரிவாயு விலையை ஒரேடியாக சுமார் 1000 ரூபாய் அதிகரித்து இருப்பது கடும் கண்டனத்துக்குரியது.

கடந்த இரண்டு மாதங்களாக சமையல் எரிவாயு வினியோகம் தடைப்பட்டதால் உணவகங்கள் கடுமையாக பாதிப்பு அடைந்ததுடன், உணவுப் பொருட்களின் விலையும் தாறுமாறாக உயர்ந்து விட்டது.

இந்நிலையில் வணிகப் பயன்பாட்டுக்கான சமையல் எரிவாயு விலை உயர்வு பொதுமக்களை கடுமையாக பாதிக்கும். ஒன்றிய அரசு இந்த விலை உயர்வை உடனடியாக திரும்பப் பெற வேண்டும்" இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

## நோயாளிகளுக்கு ஜெனரிக் மருந்துகளையே பரிந்துரைக்க வேண்டும்: சுகாதார சேவைகள் இயக்ககம் அறிவுறுத்தல்

சென்னை, மே.04-

மத்திய அரசின் கீழ் செயல்படும் மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு ஜெனரிக் மருந்துகளை மட்டுமே பரிந்துரைக்க வேண்டும் என்று மத்திய சுகாதார சேவைகள் தலைமை இயக்ககம் அறிவுறுத்தியுள்ளது.

இந்திய மருத்துவ கவுன்சிலில் பதிவு செய்த அங்கீகரிக்கப்பட்ட மருத்துவர்களுக்கான நெறிசார் வழிகாட்டுதல்கள் மற்றும் விதிகளை தேசிய மருத்துவ ஆணையம் 3 ஆண்டுகளுக்கு முன்பு வெளியிட்டது.

அதில் முக்கியமாக, 'ஜெனரிக் மருந்துகளை (மூலப்பெயர்



கொண்ட மருந்துகள்) மட்டுமே மருத்துவர்கள் பரிந்துரைக்க வேண்டும். இந்த விதியை மீறினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்' என்று மருத்துவ ஆணையம் தெரிவித்திருந்தது.

இதற்கு பல்வேறு தரப்பில் இருந்தும் ஆட்சேபம் எழுந்தது. 'ஜெனரிக் மருந்துகளை பரிந்துரை செய்வதில் தவறில்லை. ஆனால், அதன் தரத்தை எவ்வாறு உறுதி செய்வது என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். தரமற்ற மருந்துகளால் பக்க விளைவுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்று இந்திய மருத்துவ சங்கம் (ஐஎம்ஏ) தெரிவித்தது.

நாடு முழுவதும் உற்பத்தியாகும் அனைத்து மருந்துகளின் தரத்தையும் உறுதிப்படுத்துவதை ஒழுங்குமுறை செய்த பிறகே, இந்த விதிகளை அமல்படுத்த வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. இக்கோரிக்கைகளை ஏற்ற மருத்துவ ஆணையம், அந்த விதிகளை தற்காலிகமாக தள்ளிவைப்பதாக தெரிவித்தது.

இந்நிலையில், மத்திய அரசின் மருத்துவமனைகளுக்கு மத்திய சுகாதார சேவைகள் தலைமை இயக்ககம் தற்போது அனுப்பியுள்ள சுற்றறிக்கையில், 'கடந்த 2023 வழிகாட்டுதல்களைப் பின்பற்றி மத்திய அரசின் மருத்துவமனைகளில் நோயாளிகளுக்கு ஜெனரிக் மருந்துகளை மட்டுமே பரிந்துரைக்க வேண்டும்.

இதை மருத்துவமனை நிர்வாகங்கள் கண்காணிக்க வேண்டும். அதுதொடர்பான அறிக்கையை 3 மாதங்களுக்கு ஒரு முறை சமர்ப்பிக்க வேண்டும்' என்று கூறப்பட்டுள்ளது.

## அரசியல் கட்சிகள் சார்பில் மே தினம் கொண்டாட்டம்: செங்கொடி ஏற்றி தொழிலாளர்களுக்கு இனிப்பு


சென்னை, மே.04-

அரசியல் கட்சிகள் சார்பில் மே தினம் நேற்று உற்சாகமாக கொண்டாடப்பட்டது. கட்சி அலுவலகங்களில் செங்கொடி ஏற்றி தொழிலாளர்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது.

திமுக சார்பில் மே தின விழா சிந்தாதிரிப்பேட்டையில் உள்ள மே தினப் பூங்காவில் கொண்டாடப்பட்டது. இதில் திமுக தலைவரும் தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

முன்னதாக, அங்குள்ள நினைவுச் சின்னத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, பி.கே.சேகர் பாபு, மா.சுப்பிரமணியன், சி.வி.கணேசன், ஆர்.ராஜேந்திரன், மேயர் ஆர்.பிரியா, ஆ.ராசா, டி.கே.எஸ்.இளங்கோவன், பூச்சி முருகன் உள்ளிட்ட கட்சியின் மூத்த நிர்வாகிகள், தொண்டர்கள் திரளாக கலந்துகொண்டனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில தலைமை அலுவலகத்தில் கட்சியின் தேசிய நிர்வாகக்குழு உறுப்பினர் டி.எம்.மூர்த்தி தலைமையில் மே தின விழா நடந்தது.

கட்சியின் முன்னாள் மாநிலச் செயலாளர் இரா.முத்தரசன் செங்கொடியை ஏற்றினார். நிகழ்ச்சியில்



மாநில துணைச் செயலாளர் என்.பெரியசாமி, மாநில செயற்குழு உறுப்பினர் வகிதா நிஜாம், டாக்டர் ஜி.ஆர்.ரவீந்திரநாத் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற மே தின விழாவில் கட்சியின் அரசியல் தலைமைக் குழு உறுப்பினர் ஜி.ராமகிருஷ்ணன் மே தின செங்கொடியை ஏற்றினார்.

நிகழ்ச்சியில் மத்தியக் குழு உறுப்பினர் என்.குணசேகரன், மாநில செயற்குழு உறுப்பினர் கே.சாமுவேல்ராஜ், தென் சென்னை மாவட்டச் செயலாளர் ஆர்.வேல்முருகன், மாநிலக் குழு உறுப்பினர்கள் பி.சுகந்தி, வெ.ராஜசேகர், வில்சன். கே.சரவணன், சிந்தன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மே தினத்தையொட்டி மதிமுக பொதுச்செயலாளர் வைகோ எழும்பூரில் உள்ள மதிமுக தலைமை அலுவலகமான தாயகத்தில் மே தின கொடியேற்றி தொழிலாளர்களுக்கு இனிப்பு வழங்கினார்.

நாம் தமிழர் கட்சியின் தொழிற்சங்கப் பேரவை சார்பில் வளசரவாக்கத்தில் உள்ள கட்சியின் தலைமை அலுவலகமான இராவணன் குடிலில் உழைப்பாளர் விழா கொண்டாடப்பட்டது.

தமாகா சார்பில் ஆழ்வார்பேட்டையில் உள்ள தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற விழாவில் கட்சியின் தலைவர் ஜி.கே.வாசன் தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

அமைப்பு சாரா தொழிலாளர் கூட்டமைப்பு சார்பில் மெரினா கடற்கரைச் சாலையில் உள்ள உழைப்பாளர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. தொடர்ந்து மே தின உறுதிமொழியேற்பு கூட்டம் நடந்தது.

தேமுதிக பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் வெளியிட்ட மே தின வாழ்த்துச் செய்தியில், "சமதர்மம், சமூகநீதி, சமத்துவம் அடிப்படையில் உண்மையில் உழைப்போருக்கு இந்த ஜனநாயக நாட்டில் உரிய மரியாதையும், அங்கீகாரமும் கிடைக்க வேண்டும்" என்று கூறியுள்ளார்.

அதேபோல், மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கமல் ஹாசன் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில், "காடு திருத்தி நாடாக்கியது உழைப்பு, உண்ணத் தந்து உயிர்கொடுப்பது உழைப்பு, உலக மாந்தரை ஒன்றாக்கியது உழைப்பு, உழைப்பு இல்லையேல் உயிர் இல்லை உயர்வில்லை உழைப்பையே மூச்சாய் கொண்ட உழைப்பாளருக்கு என் வணக்கம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

# ‘ஜனநாயகன்’ பட லீக் விவகாரம்: 9 பேரின் ஜாமீன் மனு தள்ளுபடி



சென்னை, மே.03–

நடிகர் விஜய்யின் ‘ஜனநாயகன்’ படத்தை இணையதளத்தில் சட்டவிரோதமாக வெளியிட்டதாக கைது செய்யப்பட்ட 9 பேரின் ஜாமீன் மனுக்களை தள்ளுபடி செய்து, சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பொங்கல் பண்டிகைக்கு வெளியாகும் என அறிவிக்கப்பட்டிருந்த நடிகர் விஜய் நடித்துள்ள ‘ஜனநாயகன்’ படம் தணிக்கை வாரியத்தின் மறு ஆய்வு குழு முன் ஆய்வில் உள்ள நிலையில், ஏப்ரல் 3ஆம் தேதி சட்டவிரோதாமாக இணையதளத்தில் வெளியானது.

பட தயாரிப்பு நிறுவனமான கே.வி.என்.புரொடக்ஷன்ஸ் அளித்த புகாரின் அடிப்படையில், 21 பேர் மீது சைபர் கிரைம் போலீஸார் வழக்குப் பதிவு செய்து, விசாரித்து வருகின்றனர்.

இந்த வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள ஸ்ரீநாத், சஞ்சய், பாலகிருஷ்ணன், மணிகண்டன், ருத்ரன், ராஜேஷ், பிரசாந்த், செல்வம் மற்றும் ரஜினி ஆகியோர், ஜாமீன் கோரி சென்னை முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தனர்.

இந்த மனுக்கள், நீதிபதி எஸ்.கார்த்திகேயன் முன் விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள் தரப்பில், ‘இந்த படத்தை ஆன்லைன், சமூக வலைதளங்களில் வெளியிட்டதில் எங்களுக்கு எந்த பங்கும் இல்லை. கூகுள் டிரைவ் லிங்க் மட்டும் பெற்றோம். எங்களுக்கு எந்த தொடர்பும் இல்லை. ஜாமீன் வழங்க வேண்டும்’ என வாதிடப்பட்டது.

காவல் துறை தரப்பில் ஆஜரான மாநகர அரசு குற்றவியல் வழக்கறிஞர் ஜி.தேவராஜன், ‘பல கோடி ரூபாய் முதலீட்டில் தயாரிக்கப்பட்ட படம் இணையதளத்தில் வெளியிடப்பட்டதால், பலர் பாதிக்கப்பட்டுள்ளனர். சட்டவிரோதமாக வெளியிடப்பட்டதால், பெரும் தொகையை ஈட்டி உள்ளனர்.

புலன் விசாரணை ஆரம்ப கட்டத்தில் உள்ளது. இந்த சதித் திட்டத்தின் மற்ற தொடர்புகள் குறித்தும் கண்டறியப்பட வேண்டும் என்பதால், ஜாமீன் வழங்கக் கூடாது’ என வாதிட்டார்.

பட தயாரிப்பு நிறுவனமான கே.வி.என்.புரொடக்ஷன்ஸ் தரப்பில் வழக்கறிஞர் விஜயன் சுப்பிரமணியன் ஆஜராகி, ‘படத்தை சட்டவிரோதமாக இணையதளத்தில் வெளியிட்டதால், பல கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டது. எனவே, ஜாமீன் வழங்கக் கூடாது’ என ஆட்சேபம் தெரிவித்தார்.

அனைத்து தரப்பு வாதங்களையும் கேட்ட நீதிபதி, குற்றச்சாட்டுகளின் தீவிரம், தற்போதைய புலன் விசாரணை நிலை ஆகியவற்றை கருத்தில் கொண்டு, 9 பேரின் ஜாமீன் மனுக்களையும் தள்ளுபடி செய்து உத்தரவிட்டார்.

# ஜபல்பூர் படகு விபத்து: சுற்றுலா தலங்களில் பாதுகாப்பை உறுதி செய்ய சீமான் வலியுறுத்தல்



சென்னை, மே.03–

“கோடைக்காலம் மற்றும் பள்ளி விடுமுறை காலம் என்பதால் சுற்றுலாத் தலங்களில் மக்களின் கூட்டம் பன்மடங்கு அதிகரிக்கும் நிலையில் பாதுகாப்பு முன்னேற்பாடுகளை மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும்” என ஜபல்பூரில் படகு கவிழ்ந்து 9 பேர் உயிரிழந்த சம்பவத்தை முன்வைத்து நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில், ‘மத்தியப் பிரதேச மாநிலம் ஜபல்பூரில் அமைந்துள்ள பர்கி அணை நீர்த்தேக்கத்தில் 29 பேர் சென்ற சுற்றுலா படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளான துயர நிகழ்வில், அதில் பயணித்த 9 பேர் உயிரிழந்த செய்தியறிந்து அதிர்ச்சியும் மிகுந்த மனவேதனையும் அடைந்தேன்.

உயிரிழந்தவர்களில் இந்திய பாதுகாப்புத் துறை வெடிமருந்து தொழிற்சாலையில் பணியாற்றி வந்த திருச்சி நவல்பட்டு அண்ணா நகரைச் சேர்ந்த சகோதரர் காமராஜ், அவருடைய மனைவி கார்குழலி, மகன் தமிழ்வேந்தன், உறவினர்கள் மயூரன் மற்றும் சவுபாக்கியவதி ஆகிய ஐந்து பேர் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது துயரத்தை மேலும் அதிகரிக்கிறது. நீரில் மூழ்கியபோதும் 4 வயது மகனை அணைத்தபடி மரணித்துள்ள தாயின் புகைப்படம் நெஞ்சை உலுக்குகிறது.

உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு என்னுடைய ஆறுதலை தெரிவித்து துயரில் பங்கெடுக்கின்றேன். இந்திய துணைக் கண்டம் முழுதும் கோடைக்காலம் மற்றும் பள்ளி விடுமுறை காலம் என்பதால் சுற்றுலாத்தலங்களில் மக்களின் கூட்டம் பன்மடங்கு அதிகரிக்கும் நிலையில் பாதுகாப்பு முன்னேற்பாடுகளை தொடர்புடைய மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டுமென வலியுறுத்துகிறேன். மத்தியப் பிரதேச மாநில படகு விபத்தில் உயிரிழந்தவர்களுக்கு என்னுடைய கண்ணீர் வணக்கம்’ எனத் தெரிவித்துள்ளார்.

# நாட்டார்மங்கலத்தில் விவசாய கிணற்றில் விழுந்து மான் உயிரிழப்பு



பாடாலூர், மே.03–

பெரம்பலூர் மாவட்டம் ஆலத்தூர் தாலுகா நாட்டார்மங்கலம் மலைப் பகுதியில் அதிகளவில் மான்கள் கூட்டம் கூட்டமாக வசிக்கின்றன. இங்கு வறட்சியால் தண்ணீர், இரை தேடி மான்கள் கிராமங்களுக்கு வருவது வழக்கம். இன்று காலை தண்ணீர் தேடி மான் ஒன்று, நாட்டார்மங்கலம் வயல் பகுதிக்கு வந்தது. அப்போது எதிர்பாராத விதமாக முத்துசாமி மகன் முருகுபாண்டியன் என்பவரது விவசாய நிலத்தில் உள்ள கிணற்றில் புள்ளிமான் தவறி விழுந்து இறந்து கிடந்தது. இதை பார்த்த அப்பகுதியினர் பெரம்பலூர் வனத்துறைக்கு தகவல் தெரிவித்தனர்.

இதையடுத்து வனக்காப்பாளர் மணிகண்டன், வனக்காவலர் திலகவதி ஆகியோர் விரைந்து வந்து இறந்த மான் உடலை மீட்டு செட்டிகுளம் கால்நடை மருந்தகத்தில் பிரேத பரிசோதனை செய்தனர். அதில் இறந்தது 2 வயதுடைய பெண் மான் என்பதும், தெரியவந்தது. இதையடுத்து மானின் உடலை வனத்துறையினர் காப்பு காட்டில் கொண்டு சென்று புதைத்தனர். மான் கிணற்றில் உயிரிழந்து கிடந்ததை அவ்வழியே சென்றவர்கள் பரிதாபத்துடன் பார்த்து சென்றனர்.

# காவேரிப்பாக்கம் அருகே நெல் குவியல்கள் மழையில் நனைந்து சேதம்; வெயிலில் உலர்த்தி பதப்படுத்தும் விவசாயிகள்



காவேரிப்பாக்கம், மே.03–

காவேரிப்பாக்கம் அருகே நெல் குவியல்கள் மழையில் நனைந்து சேதமானது. இதனால் விவசாயிகள் நெல்லை வெயிலில் உலர்த்தி பதப்படுத்தினர். காவேரிப்பாக்கம் வட்டாரத்தில் நேற்று அதிகாலை பலத்த காற்று மற்றும் இடியுடன் கூடிய மழை பலத்த மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மற்றும் பொது மக்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சி நிலவியது. ஆனால் பெரும்பாலான விவசாயிகள் மத்தியில், திடீர் மழையால் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

தற்போது விவசாயிகள் நவரைப் பருவத்தில் அறுவடை செய்த நெல் மூட்டைகள் மற்றும் நெல் குவியல்கள், அரசின் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் விற்பனைக்காக ஆங்காங்கே பாதுகாத்து வருகின்றனர். இதில் பல்வேறு விவசாயிகள் போதிய இடவசதி காரணமாக தங்கள் விவசாய நிலங்களில் பாதுகாத்து வருகின்றனர்.

இந்நிலையில் காவேரிப்பாக்கம் வட்டாரத்தில் நேற்று அதிகாலை பெய்த திடீர் மழையால் விவசாய நிலங்களில் உள்ள நெல் மூட்டைகள், ஆங்காங்கே தார்சாலையில் உள்ள நெல் குவியல்கள் என மொத்தம் சேதம் ஏற்பட்டுள்ளது. இதனால் நேற்று காலை கூலி ஆட்கள் உதவியுடன் மழையில் நனைந்த நெல்லை, மீண்டும் வெயிலில் உலர்த்தி பதப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர். இதனால் விவசாயிகளுக்கு கூடுதல் செலவு ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.

# “தி.மு.க., அதிமுகவுக்கு எதிரான வாக்குகளை விஜய் அதிகம் பெறுகிறார்.. ஆனால்” திருமாவளவன் கருத்து



சென்னை, மே,03–

“இன்று திமுக கூட்டணி மாபெரும் வெற்றி பெறப்போகிறது என்று சொன்னால், அதற்கு விசிகவின் அணுகுமுறையும், விசிகவின் உறுதிப்பாடும் ஒரு காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது. கூடுதல் தொகுதிகளுக்கு ஆசைப்பட்டு, மாற்றம் என்ற பெயரில் நாம் வேறொரு முடிவை எடுத்திருந்தால், தமிழக அரசியல் களம் தலைகீழாக மாறியிருக்கும்” என்று விசிக தலைவர் திருமாவளவன் தெரிவித்தார்.

திருமாவளவன் வெளியிட்ட காணொலிப் பதிவில், “திமுக கூட்டணி வேட்பாளர்களும், விசிக சார்பில் போட்டியிட்ட 8 வேட்பாளர்களும் உறுதியாக வெல்வார்கள் என்று நம்புகிறேன்.

கூட்டணி கட்சிகள் போட்டியிட்ட சில தொகுதிகளில் சில விசிக பொறுப்பாளர்கள் சிறப்பாக பணியாற்றவில்லை என்ற தகவல்கள் எனக்கு வந்துள்ளது. இது தொடர்பான விவரங்களை திரட்டி வருகிறோம். அதே நேரத்தில் இந்த தேர்தலில் விசிகவினர் சிறப்பாக பணியாற்றியதாக கூட்டணிக் கட்சி தலைவர்கள் என்னை தொலைபேசியில் அழைத்து பேசினார்கள்.

மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி மிகப் பெரிய வெற்றியை பெறப்போகிறது என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. ஏனெனில் பெண்கள், இளைஞர்களுக்கான பல திட்டங்களை கடந்த 5 ஆண்டுகளில் திமுக அரசு நிறைவேற்றியுள்ளது.

மேலும், இக்கூட்டணி ஒரு கொள்கை பிடிப்புள்ள கூட்டணி. இந்த பொறுப்புணர்வோடு இக்கூட்டணி தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. இந்த கூட்டணியை கட்டுக்கோப்பாக வைத்துக்கொள்ள விசிக பெரும் முயற்சி எடுத்துள்ளது.

கடந்த 2 ஆண்டுகளுக்கும் மேலாக மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியை சீர்குலைக்க கங்கணம் கட்டிக்கொண்டு பல்வேறு முயற்சிகளை பலரும் எடுத்தனர். அவர்களின் இலக்கு விசிகதான். எப்படியாவது திருமாவளவனை திமுக கூட்டணியிலிருந்து வெளியேற்ற வேண்டும் என, என்னை ஒரு துருப்புச் சீட்டாக பயன்படுத்த நினைத்தனர். என் மூலமாக திமுக கூட்டணியை பலவீனப்படுத்த திட்டமிட்டனர்.

பல விதத்தில் ஆசை காட்டி இக்கூட்டணியை சிதைக்க முயற்சி செய்தனர். ஆனால் பொறுமை காத்து, தொலைநோக்கு பார்வையோடு இக்கூட்டணியில் இருந்தோம்.

மதவாத, சாதியவாத சக்திகள் பலவித முகமூடிகளோடு களத்துக்கு வந்துள்ளனர். அவர்கள் வலுப்பெற்றால் தமிழகத்துக்கு பெரும் பின்னடைவு ஏற்படும். இதனால் அவர்களின் முயற்சிகளையெல்லாம் புறந்தள்ளி கூட்டணியில் தொடர்ந்து நீடித்தோம். இதனை பாராட்டுவதற்கு பதிலாக, கொச்சைப்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டார்கள்.

கூடுதல் இடங்களை பெற வாய்ப்பிருந்தும் திருமாவளவன் பெறவில்லை என்று விமர்சித்தார்கள். ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எதிராக இந்த அரசு இருந்தாலும், திருமாவளவன் இந்த அரசை ஆதரித்தார் என்றார்கள். இப்படி எல்லாம் பேசி நம்மை கூட்டணியிலிருந்து வெளியேற்ற முயற்சி செய்தார்கள்.

தற்காலிக லாபத்துக்காக ஒரு முடிவை எடுக்க நான் விரும்பவில்லை. எவ்வளவோ வாய்ப்பு இருந்தும், ஆசை காட்டியும் திருமாவளவன் உறுதியாக இருந்தார் என்பதை குறிப்பிட்டு யாரும் என்னை பாராட்டவில்லை. இன்று திமுக கூட்டணி மாபெரும் வெற்றி பெறப்போகிறது என்று சொன்னால், அதற்கு விசிகவின் அணுகுமுறையும், விசிகவின் உறுதிப்பாடும் ஒரு காரணம் என்பதை யாரும் மறுக்க முடியாது.

கூடுதல் இடங்களுக்கு ஆசைப்பட்டு, மாற்றம் என்ற பெயரில் நாம் வேறொரு முடிவை எடுத்திருந்தால், தமிழக அரசியல் களம் தலைகீழாக மாறியிருக்கும். அதை நாம் விரும்பவில்லை.

திமுகவுடனான தொகுதிப் பங்கீட்டில் நாம் இரட்டை இலக்க தொகுதிகளை எதிர்பார்த்தோம், அது கிடைக்கவில்லை. அதற்காக நாம் முரண்டுபிடித்து, இழுபறி நிலையை உருவாக்கவில்லை. கூட்டணியில் சங்கடமான சூழலை உருவாக்க விரும்பவில்லை. கூட்டணியை பலவீனப்படுத்த கூடாது என்று நானே முடிவெடுத்தேன். மேலோட்டமாக பார்த்தால் அது ஏமாளித்தனம் போல தெரியும். பொறுப்புணர்வோடு ஆய்வு செய்தால் நம் பெருந்தன்மையை புரிந்துக் கொள்ள முடியும். ஆனால், அதனையும் பலர் இங்கு கொச்சைப் படுத்துகிறார்கள்.

எக்ஸிட் போல் முடிவுகளில் திமுக கூட்டணி வெற்றிபெறும் என சொல்லியுள்ளனர். சிலர் அதிமுக பாஜக அணி வெற்றி பெறும் என சொல்லியுள்ளனர். நாம் கருத்துக் கணிப்புகளை நம்ப தேவையில்லை. எப்படி கணக்கு போட்டாலும் திமுக கூட்டணியே பெரும் வெற்றி பெறும். திமுக கூட்டணிக்கு எதிரான வாக்குகளை பலர் போட்டிபோட்டு பிரிக்கிறார்கள்.

திமுக, அதிமுகவுக்கு எதிர்ப்பு வாக்குகள் காலம் காலமாக இருந்து வருகிறது. இந்த வாக்குகளை அவ்வப்போது வந்த தலைவர்கள் அறுவடை செய்தனர். இப்போது திமுகவை அதிமுக, விஜய், சீமான் ஆகியோர் எதிர்த்து வாக்குகளை பிரித்தனர்.

திமுக, அதிமுகவுக்கு எதிரான வாக்குகளை விஜய் அதிகம் பெறுகிறார். ஆனால், தனித்த சக்தியாக திமுக அதிமுக அணிகளை பின்னுக்கும் தள்ளும் வலிமையை விஜய் பெறவில்லை. எப்படி பார்த்தாலும் திமுக கூட்டணி வெற்றி பெறும்.

விசிக 8 தொகுதிகளிலும் வெற்றி பெறும். முடிவு எதுவாக இருந்தாலும் நமது அரசியல் களம் நீர்த்துப் போகாது. நம் பயணம் வேகம் பெறும், தீவிரமடையும்” என்று திருமாவளவன் கூறினார்.




# வேளாளர் வித்யாலயா சீனியர் செகண்டரி பள்ளியில் “உத்பவ் 2026” கலைவிழா

ஈரோடு, மே.03–

வேளாளர் வித்யாலயா சீனியர் செகண்டரி பள்ளியில் "உத்பவ் 2026" கலைவிழா ஏப்ரல் 30ஆம் நாள் வியாழக்கிழமை நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் வேளாளர் கல்வி அறக்கட்டளையின் தலைவர் சி.ஜெயக்குமார் கலந்து கொண்டு தலைமையுரை வழங்கினார். பள்ளியின் தாளாளர் எஸ்.டி. சந்திரசேகர் சிறப்புரையாற்றினார். பள்ளியின் ட்ரஸ்டி. சி.பாலசுப்ரமணியம் மற்றும் எம்.யுவராஜா வாழ்த்துரை வழங்கினார். இவ்விழாவில் சிறப்பு விருந்தினராக ஐ.ஐ.டி. சென்னை செயல்திட்டத் தலைவர். என். ஹரி கிருஷ்ணன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். பள்ளியின் முதன்மை முதல்வர் ஆர்.நல்லப்பன் கலந்து கொண்டு வாழ்த்துரை வழங்கினார். மேலும், இவ்விழாவில் பள்ளியின் முதல்வர்.வி.பிரியதர்ஷினி வரவேற்புரை ஆற்றினார். பள்ளியின் ஆண்டறிக்கையை வேளாளர் சி.பி.எஸ்.ஈ. குடும்பத்தினர் வாசித்தனர். இதனைத் தொடர்ந்து மாணவர்களின் கலைநிகழ்ச்சிகள் நடைபெற்றன. இக்கலைநிகழ்ச்சியின் இறுதியாகத் துணை முதல்வர் ஆர்.மஞ்சுளா நன்றியுரை வழங்கினார். மேலும் , இந்நிகழ்வில் மக்கள் தொடர்பு அலுவலர் எம்.கார்த்திகேயன், ஆசிரிய ஆசிரியைகள், ஆசிரியரல்லாப் பணியாளர்கள், பெற்றோர்கள் மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டனர்.

# “கருத்துக்கணிப்புகள் தொலைக்காட்சி விவாதங்களுக்கு மட்டுமே” கவுரவ் கோகோய் கடும் தாக்கு

குவாஹாட்டி, மே.03–

“கருத்துக் கணிப்புகள் தொலைக்காட்சி விவாதங்களுக்காக மட்டுமே பயன்படுபவை. மக்களின் உண்மையான தீர்ப்பு வாக்குகளை எண்ணும்போதுதான் வெளிப்படும்” என்று அசாம் காங்கிரஸ் தலைவர் கவுரவ் கோகோய் தெரிவித்துள்ளார்.

அசாம் சட்டப்பேரவைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை திங்கள் கிழமை (மே 4) நடைபெற உள்ள நிலையில், பாஜக தலைமையிலான அரசே மீண்டும் ஆட்சிக்கு வரும் என்று வெளியாகியுள்ள தேர்தலுக்கு பிந்தைய கருத்துக் கணிப்புகள், மாநிலம் முழுவதும் கடும் அரசியல் எதிர்வினைகளைத் தூண்டியுள்ளன.



இதுகுறித்து பேசிய அசாம் காங்கிரஸ் தலைவர் கவுரவ் கோகோய், “கருத்துக் கணிப்புகள் என்பவை முதன்மையாகத் தொலைக்காட்சி விவாதங்களுக்காக மட்டுமே பயன்படுபவை. எங்களைப் பொறுத்தவரை, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மூலம் அசாம் மக்கள் வழங்கிய தீர்ப்பே முக்கியமானது. உண்மையான முடிவு மே 4ஆம் தேதிதான் தெரியவரும்; நாங்கள் மிகுந்த நம்பிக்கையுடன் இருக்கிறோம்.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறைகளின் பாதுகாப்பு குறித்து மேற்கு வங்கத்தை போலவே அசாமிலும், எங்கள் வேட்பாளர்களிடமிருந்து ஏராளமான புகார்களைப் பெற்றுள்ளோம். இந்தப் பிரச்சினைகள் கடுமையான கவலைகளை எழுப்பியுள்ளன, நாங்கள் அனைத்தையும் ஆவணப்படுத்தியுள்ளோம். மேலும், இது குறித்து தொடர்ந்து கேள்வி எழுப்பி வருகிறோம்.

மாற்றத்திற்கு ஆதரவாக அசாம் ஒரு மகத்தான தீர்ப்பை வழங்கும். பாஜக இதை உணராமல் இருக்கலாம். ஆனால் இந்த முறை அசாம் மக்கள் மாற்றத்திற்காக வலுவாகவும், அமைதியாகவும் வாக்களித்துள்ளனர்" என்று தெரிவித்துள்ளார்.

# மாதவரத்தில் நேற்றிரவு பரிதாபம்; பைக் மீது கன்டெய்னர் லாரி மோதி கணவன், மனைவி, மகன் பரிதாப பலி






மாதவரம், மே.03–

மாதவரம் ரவுண்டானா ஆந்திரா பஸ் நிலையம் அருகே பைக் மீது கன்டெய்னர் லாரி மோதியதில் கணவன், மனைவி, மகன் ஆகிய 3 பேரும் உடல்நசுங்கி சம்பவ இடத்தில் பலியானார்கள். இந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது. அம்பத்தூர் பகுதியை சேர்ந்தவர் கார்த்திகேயன் (40). டிரைவராக வேலை செய்து வந்தார். இவரது மனைவி பிரேமலதா (36). இவர்களுக்கு இன்பசெல்வன் (8) என்ற ஒரு மகன் உள்ளார். அதே பகுதியில் உள்ள பள்ளியில் 3ம் வகுப்பு படித்து வந்தான்.

இந்த நிலையில், மணலியில் உள்ள பிரேமலதாவின் உறவினர் வீட்டில் நேற்று சுபநிகழ்ச்சி நடைபெற்றது. இதில் கார்த்தி கேயன், பிரேமலதா, இன்பச்செல்வன் ஆகியோர் பங்கேற்றுவிட்டு நிகழ்ச்சி முடிந்ததும் நேற்று இரவு வீட்டிற்கு பைக்கில் புறப்பட்டனர். மாதவரம் ரவுண்டானா ஆந்திரா பேருந்து நிலையம் அருகில் வந்து கொண்டிருந்தனர். ரவுண்டானா மாடி பேருந்து நிலைய 2வது கேட் வழியாக பேருந்து ஒன்று வந்து 200 அடி சாலை வளைவில் திரும்பியபோது, பைக்கில் வந்த கார்த்திகேயன் பேருந்தின் மீது மோதாமல் இருக்க வலது புறம் திருப்பி சாலையின் ஓரமாக செல்ல முயற்சித்துள்ளார்.

அப்போது, இவர்களுக்கு பின்னால் வேகமாக வந்த கர்நாடகா மாநில கன்டெய்னர் லாரி எதிர்பாராதவிதமாக பைக் மீது மோதியதில் நிலைதடுமாறி கார்த்திகேயன், அவரது மனைவி, மகன் ஆகியோர் சாலையில் விழுந்தனர். சுதாரித்து எழுவதற்குள் அதே லாரியின் சக்கரங்கள் அடுத்தடுத்து 3 பேர் மீதும் ஏறி இறங்கியது. இதில், தலை, முகம், உடல் முழுவதும் நசுங்கி ரத்த வெள்ளத்தில் சம்பவ இடத்திலேயே குடிதுடித்து பரிதாபமாக உயிரிழந்தனர். அவ்வழியாக வந்த வாகன ஓட்டிகள் இந்த காட்சியை பார்த்து கண்கலங்கினர். பின்னால் வந்த வாகனங்களை நிறுத்திவிட்டு போலீசுக்கு தகவல் கொடுத்தனர். அந்த பகுதியில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த போலீசார் சம்பவ இடத்திற்கு வந்து, போக்குவரத்து புலனாய்வு பிரிவு போலீசாருக்கு தெரிவித்ததின்பேரில் போலீசார் சம்பவ இடத்துக்கு வந்து இறந்தவர்களின் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக ஸ்டான்லி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

விபத்து குறித்து மாதவரம் போக்குவரத்து புலனாய்வு பிரிவு இன்ஸ்பெக்டர் சுகிலா வழக்குப்பதிவு செய்து விபத்து ஏற்படுத்திய காஞ்சிபுரத்தை சேர்ந்த கன்டெய்னர் லாரி டிரைவர் அன்பரசு (44) என்பவரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். ஒரே குடும்பத்தை சேர்ந்த 3 பேர் விபத்தில் பலியான சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

மாதவரம் பகுதியில் மெட்ரோ ரயில் திட்ட பணி நடைபெற்று வருவதால் கடந்த சில மாதங்களாக இந்த பகுதியில் கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டு வருகிறது. மேலும் ஆந்திரா பேருந்து நிலையத்திலிருந்து வரக்கூடிய பேருந்துகள், மாதவரம் சிஎம்டிஏவில் இருந்து வரக்கூடிய லாரிகள் என கனரக வாகனங்கள் அதிகளவில் இந்த சாலையில் சென்று வருவதால் போக்குவரத்து போலீசார் தொடர்ந்து பணியில் ஈடுபட்டு போக்குவரத்தை பராமரித்தாலும் இருசக்கர வாகன விபத்து அடிக்கடி ஏற்படுகிறது. எனவே, மாதவரம் ரவுண்டானா பகுதியில் போக்குவரத்து நெரிசலை தடுக்கவும், விபத்துகளை தவிர்க்கவும் போக்குவரத்து சிக்னல்கள் அமைக்க வேண்டும் என வாகன ஓட்டிகள் காவல்துறை உயர் அதிகாரிகளுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

# மகளிர் டி20 உலகக்கோப்பை கிரிக்கெட்; இந்திய அணி அறிவிப்பு

மும்பை: மே.3–

இந்தாண்டு நடக்கும் மகளிர் டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடருக்கான இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

2026ம் ஆண்டுக்கான டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடர் வரும் ஜூன் 12ம் தேதி முதல் ஜூலை 5ம் தேதி வரை இங்கிலாந்தில் நடைபெறுகிறது. இதில், இந்தியா, இங்கிலாந்து உள்பட மொத்தம் 12 அணிகள் பங்கேற்க இருக்கின்றன. குரூப் 1ல் இந்தியா, ஆஸ்திரேலியா, வங்கதேசம், நெதர்லாந்து, பாகிஸ்தான் மற்றும் தென் ஆப்ரிக்கா ஆகிய 6 அணிகள் இடம் பெற்றுள்ளன. அதேபோல, குரூப் 2ல் இங்கிலாந்து, அயர்லாந்து, நியூசிலாந்து, ஸ்காட்லாந்து, இலங்கை மற்றும் வெஸ்ட் இண்டீஸ் ஆகிய அணிகள் உள்ளன.

இந்திய அணி ஜூன் 14ம் தேதி விளையாடும் தனது முதல் ஆட்டத்தில் பாகிஸ்தானுடன் மோதுகிறது. 2009ம் ஆண்டு முதல் நடத்தப்பட்டு வரும் மகளிர் டி20 உலகக்கோப்பை தொடரில், இந்திய அணி ஒருமுறை கூட கோப்பையை வெல்ல வில்லை. கடந்த 2024ம் ஆண்டு நடந்த டி20 உலகக்கோப்பை தொடரில் இந்திய அணி குரூப் சுற்றோடு வெளியேறி ஏமாற்றம் அளித்தது.

ஆனால், கடந்த ஆண்டு நடந்த 50 ஓவர் உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியில் முதல்முறையாக இந்திய அணி சாம்பியன் பட்டம் வென்றுள்ளது. எனவே, அதே உத்வேகத்துடன் இந்த முறை மகுடம் சூடும் என்று ரசிகர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

இந்த நிலையில், டி20 உலகக்கோப்பை கிரிக்கெட் தொடருக்கான இந்திய மகளிர் அணி அறிவிக்கப்பட்டுள்ளது. ஹர்மன்பிரீத் கவுர் தலைமையிலான அணியில் இளம் வீராங்கனைகளுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. அதேபோல, முக்கிய ஆல் ரவுண்டரான அமன்ஜோத் கவுருக்கு அணியில் வாய்ப்பு வழங்கப்படவில்லை.

அணி விபரம்:

ஹர்மன்பிரீத் கவுர் (கேப்டன்)
ஸ்மிருதி மந்தனா (துணை கேப்டன்)
ஷபாலி வர்மா
ஜெமிமா ரோட்ரிக்ஸ்
பாரதி புல்மாலி
தீப்தி சர்மா
ரிச்சா கோஷ்
யாஸ்திகா பாட்டியா
ராதா யாதவ்
ஸ்ரேயங்கா பாட்டீல்
நந்தினி சர்மா
அருந்ததி ரெட்டி
ரேணுகா தாக்கூர்
கிராந்தி கவுட்
ஸ்ரீ சரணி



# மே தினம் விடுமுறை எதிரொலி சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை வழக்கத்தை காட்டிலும் குறைவு

ஊட்டி, மே.03–

மே தினம் விடுமுறையையொட்டி ஊட்டியில் சுற்றுலா பயணிகள் கூட்டம் அதிகமாக காணப்பட்டது. எனினும், வழக்கத்தை காட்டிலும் இந்த ஆண்டு சற்று கூட்டம் குறைந்தே காணப்பட்டது. நீலகிரி மாவட்டத்திற்கு நாள்தோறும் ஏராளமான சுற்றுலா பயணிகள் வருகின்றனர்.

குறிப்பாக, வார விடுமுறை நாட்கள் மற்றும் தொடர் விடுமுறை நாட்களில் அதிகளவு சுற்றுலா பயணிகள் வருவதை தற்போது வாடிக்கையாக கொண்டுள்ளனர்.தற்போது கோடை சீசன் என்பதால், கடந்த ஒரு மாதமாக ஊட்டிக்கு வரும் சுற்றுலா பயணிகள் கூட்டம் சற்று அதிகரித்துள்ளது.

மே 1ம் தேதி தொழிலாளர்கள் தினத்தையொட்டி விடுமுறை கிடைத்த நிலையில், வெளி மாநிலம் மற்றும் வெளி மாவட்டங்களை சேர்ந்த சுற்றுலா பயணிகள் நேற்று ஊட்டியை முற்றுகையிட்டனர். தொட்டபெட்டா, பைக்காரா, தாவரவியல் பூங்கா, ரோஜா பூங்கா செல்லும் சாலைகளிலும் வாகனங்கள் அதிகம் காணப்பட்டன. மேலும், அனைத்து சுற்றுலா தலங்களிலும் மக்கள் கூட்டம் அலைமோதியது.

ஊட்டி ஏரியில் வெகு நேரம் காத்திருந்தே சுற்றுலா பயணிகள் நேற்று படகு சவாரி மேற்கொள்ள முடிந்தது. நேற்று அதிகளவு சுற்றுலா பயணிகள் வந்த நிலையில், பெரும்பாலான ஓட்டல்களில் மக்கள் கூட்டம் அலைமோதியது.

அதேசமயம், இபாஸ் நடைமுறையில் உள்ள நிலையில், கடந்த ஆண்டுகளில் மே தினத்தன்று ஊட்டி வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை காட்டிலும், இந்த ஆண்டு கூட்டம் குறைந்தே காணப்பட்டது.

பொதுவாக மே தினத்தன்று திருப்பூர், கோவை போன்ற சமவெளிப் பகுதிகளில் உள்ள தொழிற் நிறுவனங்களுக்கு விடுமுறை என்பதால், ஏராளமான இளைஞர்கள் இரு சக்கர வாகனங்களில் ஊட்டியை முற்றுகையிடுவார்கள். ஆனால், இந்த ஆண்டு தொழிலாளர்கள் வருகையும் குறைந்தே காணப்பட்டது.

அதேசமயம், அண்டை மாநிலங்களான கேரளா மற்றும் கர்நாடக மாநிலங்களில் இருந்து வந்த சுற்றுலா பயணிகளே அனைத்து சுற்றுலா தலங்களிலும் அதிகம் காணப்பட்டனர்.

இபாஸ் நடைமுறையில் உள்ள காரணத்தினாலேயே கடந்த இரு ஆண்டுகளாக நீலகிரி மாவட்டத்திற்கு வரும் சுற்றுலா பயணிகள் எண்ணிக்கை குறைந்து வருவதாக கூறப்படுகிறது.

# எல்லப்புடையாம்பட்டி ஏரியில் இறைச்சி கழிவுகள் கொட்டுவதால் சுகாதார சீர்கேடு; தடுக்க வலியுறுத்தல்

அரூர், மே.03–

அரூர் அடுத்த எல்லப்புடையாம்பட்டி ஏரியில் இறைச்சி கழிவுகள் கொட்டுவதை தடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அரூர் தாலுகா, எல்லப்புடையாம்பட்டி மணவாளன் சாமி ஏரி சுமார் 100 ஏக்கர் பரப்பளவில் உள்ளது.

எல்லப் புடையாம் பட்டி ஏரிக்கரை பகுதியில் வேடியப்பன் கோயில் உள்ளது. முத்தானூர், மாவேரிப் பட்டி, கம்மாளப்பட்டி, ஈட்டியம் பட்டி, கௌாப்பாறை, கீரைப்பட்டி உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த பொதுமக்கள் இந்த கோயிலுக்கு வந்து செல்கின்றனர்.



மணவாளன் சாமி ஏரி மற்றும் கோயில் வளாகப் பகுதியை உள்ளூர் மக்கள் பராமரித்து வருகின்றனர். மணவாளன் சாமி ஏரியில் இருந்து எல்லப்புடையாம்பட்டி கிராம மக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக ஆழ்துளை கிணறு அமைக்கப்பட்டு ஊராட்சி நிர்வாகம் சார்பில் குடிநீர் வழங்கப்படுகிறது.

இந்த ஏரியில் மீன் பிடிப்பதற்கான டெண்டர் விடுப்பட்டுள்ளது. கடந்த 2 ஆண்டுகளாக டெண்டர் எடுத்தவர் ஏரியில் மீன் குஞ்சுகளை விட்டு வளர்த்து, விற்பனை செய்து வருகிறார்.

இந்நிலையில், ஏரியில் வளரும் மீன்களுக்கு உணவாக கோழி உள்ளிட்ட இறைச்சிகளின் கழிவுகள், மரவள்ளி கிழங்குகளின் கழிவுகள், கெட்டுபோன முட்டைகளை கொட்டுவதாக புகார் எழுந்துள்ளது. இதனால், ஏரியில் உள்ள தண்ணீர் மாசடைந்து, துர்நாற்றம் வீசுவதாக கோயிலுக்கு வரும் பக்தர்கள் புகார் தெரிவிக்கின்றனர்.

எல்லப்புடையாம் பட்டியைச் சேர்ந்த மக்கள் குடிநீருக்காக பயன்படுத்தும் ஏரியில் இறைச்சி கழிவுகள் கொட்டுவதை கட்டுப்படுத்தவும், ஏரி தண்ணீர் மாசடைவதை தடுக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# “தமிழகம், புதுச்சேரியில் பா.ஜ.க.,வுக்கு இடமில்லை என்பது உறுதி” : கே.பாலகிருஷ்ணன் கருத்து

புதுச்சேரி, மே.03–

“தேர்தலுக்கு பிறகு மாறுப்பட்ட கருத்துக் கணிப்புகள் வந்தாலும், புதுச்சேரி மற்றும் தமிழகத்தில் பாஜகவுக்கு இடமில்லை என்பது உறுதி” என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமை குழு உறுப்பினர் கே.பாலகிருஷ்ணன் கருத்து தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் சாகித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் தமிழ்ச்செல்வனின் ‘திருப்பி அடித்த வரலாறு’ நூல் வெளியீடு மற்றும் பாராட்டு விழா, அவரது சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டதை கொண்டாடும் விழா என இருபெரும் விழா தனியார் ஓட்டலில் இன்று நடைபெற்றது.

இதில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் தலைமை குழு உறுப்பினர் கே.பாலகிருஷ்ணன் பங்கேற்றார். பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியது: “தேர்தல் முடிவு நாளை மறுதினம் வெளியாகிறது. இதனை மக்கள் ஆவலோடு எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

இந்தச் சூழ்நிலையில் மத்திய அரசு வணிக சிலிண்டர் விலையை ஆயிரம் ரூபாய் உயர்த்தியுள்ள கொடுமை நடந்திருக்கிறது. இதனால் வணிக நிறுவனங்கள் கடுமையான பாதிப்புக்கு ஆளாகி இருப்பது மட்டுமல்ல ஓட்டல்களில் விற்கப்படும் உணவு பொருட்களின் விலை 20 சதவீதம் உயரும் என்று அறிவுத்துள்ளார்கள். இதன்மூலம் மிகப் பெரிய அளவுக்கு மக்கள் தலைமையில் சுமையை மத்திய அரசு ஏற்றி விட்டுள்ளது.

அடுத்தகட்டமாக சமையல் எரிவாயு மற்றும் டீசல், பெட்ரோல் விலையும் உயரும் என்ற அறிவிப்பும் வந்து கொண்டிருக்கிறது. அந்த அறிவிப்பை மத்திய அரசு வெளியிட்டாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை.

தேர்தலுக்கு பிறகு மாறுப்பட்ட கருத்துக் கணிப்புகள் வந்தாலும், புதுச்சேரி, தமிழத்தில் பாஜகவுக்கு இடமில்லை என்பது உறுதியாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது பாராட்டத்தக்கது.



தமிழகத்தில் நடைபெற்ற தேர்தலில் திமுக தலைமையிலான மதச்சார்ப்பற்ற முற்போக்கு கூட்டணி வெற்றி பெறும் என்கிற சூழல்தான் உள்ளது. தேர்தலுக்கு பிறகு தமிழகத்தில் புதிய அரசியல் சூழ்நிலை உருவாக வாய்ப்புள்ளது.

புதுச்சேரியில் தேர்தல் முடிவு எப்படி இருக்கும், யார் முதல்வராக வருவார், எந்த அணி வெற்றி பெறும் என்பதை தெளிவாக கணிக்க முடியவில்லை. ஏனென்றால், தேர்தலில் குழப்பமான சூழ்நிலை நிலவி விட்டது. அணிக்கு தலைமையேற்றுள்ள காங்கிரஸ், திமுக ஒருமித்த கருத்தோடு பாஜகவை வீழ்த்த வேண்டும் என்ற நிலையில் உறுதியாக இருந்திருந்தால், நிச்சயமாக அந்த அணிக்கு மக்கள் மகத்தான ஆதரவை அளித்திருப்பார்கள்.

ஆனால், நிலையான உறுதிபாட்டினை திமுக, காங்கிரஸ் தலைவர்கள் மேற்கொள்ளாதது, விசிக, சிபிஐ, சிபிஎம் உள்ளிட்ட கூட்டணி கட்சிகளுக்கு இடம் ஒதுக்காதது, காங்கிரஸ் கட்சிக்குள் பரஸ்பர போட்டி என்பதெல்லாம் ஏற்பட்டு, ஒரு குழப்பத்துக்கு அவர்களே காரணமாகிவிட்டார்கள். எதுவாக இருந்தாலும், தேர்தல் முடிவு எப்படி வர போகிறது என்று பார்க்க வேண்டி இருக்கிறது.

மாஹேவில் மார்க்சிஸ்ட் கட்சி ஆதரவோடு போட்டியிடும் வேட்பாளர் வெற்றி பெறுவார் என்ற சூழல் நிலவுகிறது.

தமிழகத்தில் மீண்டும் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கவுள்ள மு.க.ஸ்டாலினுக்கு வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

தேர்தலில் அதிக இடங்களில் போட்டியிட நாங்கள் விரும்பினாலும், 5 இடங்களுக்கு மேல் கொடுக்க முடியாது என்று திமுக கூறியது வருத்தம் அளித்தது. 1, 2 இடத்தை உயர்த்தி கொடுப்பதால் கூட்டணிக்குள் குழப்பம் வந்துவிட போவதில்லை.

எங்களுக்குள் மனச்சங்கடங்கள் இருந்தாலும், தேர்தலில் பாஜகவை வீழ்த்த வேண்டும். அதிமுக துணையோடு பாஜக ஆட்சியை பிடிக்க இடம் அளித்துவிடக் கூடாது என்ற ஒற்றை காரணத்துக்காக திமுகவுடன் இணைந்து பணியாற்றி உள்ளோம். எதிர்காலத்திலும் பாஜகவை எதிர்த்து போராடுவோம்.

அதேசமயம், எதிர்காலத்தில் ஆட்சியை அமைக்கக் கூடிய திமுக அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகளை பொறுத்து மக்கள் பிரச்சினைகள் தொடர்பாக எங்களுடைய அணுகுமுறையை மேற்கொள்வோம்.

கடந்த தேர்தலைவிட இந்த தேர்தலில் இளைஞர்கள் பங்களிப்பு அதிகமாக இருந்தது. அதில் ஒரு பகுதியினர் விஜய் பின்பு சென்றிருக்கலாம். ஆனால், ஏதோ ஒரு எதிர்பார்ப்பு, மாற்றம் வேண்டும் என்பது இளைஞர்களிடம் இருக்கிறது. அப்படிப்பட்ட இளைஞர்களை அணி திரட்டுவதற்கு ஆக்கப்பூர்வமான வேலையை மேற்கொள்வோம்” என்று அவர் கூறினார்.

# அங்கீகரிக்கப்படாத ORS, ORSL விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை!

சென்னை, மே.04–

வயிற்றுப்போக்கு, வாந்தி உள்ளிட்ட உடல் உபாதைகளுக்கு வழங்கப்படும் ORS, ORSL கரைசல்களை விற்பனை செய்யக்கூடாது என மருந்து கட்டுப்பாட்டு இயக்ககம் தெரிவித்துள்ளது. முறையான வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி விற்பனை செய்யுமாறு மருந்து கடை உரிமையாளர்களுக்கு தமிழக மருந்து கட்டுப்பாட்டு இயக்ககம் அறிவுறுத்தியுள்ளது. அங்கீகரிக்கப்படாத ORS, ORSLஐ விற்பனை செய்தால் கடும் நடவடிக்கை என எச்சரிக்கை விடுத்துள்ளது.




# ஆக்கப் பொறுத்தவர்கள் ஆறப் பொறுங்கள்: தேர்தல் முடிவுகள் குறித்து பிரேமலதா கருத்து

சென்னை, மே.03–

ஆக்கப் பொறுத்தவர்கள் ஆறப்பொறுங்கள் என தேர்தல் முடிவுகள் குறித்து பிரேமலதா கருத்து தெரிவித்துள்ளார்.



சென்னை கோயம்பேட்டில் உள்ள தேமுதிக தலைமை அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் கூறியதாவது: கருத்துக்கணிப்பை நான் எப்படி பார்க்கிறேன் என்றால் ஆக்கப் பொறுத்தவர்கள் ஆறப் பொறுங்கள்; எல்லாம் முடிந்து இருக்கிறது. இன்னும் இரண்டு நாட்கள் தான் இருக்கிறது.

மே 4ம் தேதி காலை 8 மணிக்கு ஆரம்பித்தால் மாலை 5 மணிக்குள் ரிசல்ட் தெரியப் போகிறது. அதற்கு அதீத எதிர்பார்ப்பும், கற்பனையும் தேவையில்லை. நிச்சயம் எல்லோருக்கும் நல்லதே நடக்கும்.

மதச்சார்பற்ற வெற்றிக்கூட்டணியில் போட்டி போடுகிறோம். உறுதியாக எங்களுடைய கூட்டணி அமோக வெற்றி பெறும்.

இன்னும் 2 நாட்கள் தான் இருக்கிறது. எல்லோரும் களத்தில் மிக தீவிரமாக பணியாற்றி இருக்கிறார்கள். மே 4ல் நிச்சயமாக வெற்றி வரும். நிச்சயமாக நான் உங்களை அழைத்துப் பேசுவேன். இவ்வாறு அவர் கூறினார்.

# அ.தி.மு.க., 200 இடங்களில் வெல்லும்: முன்னாள் அமைச்சர் கடம்பூர் ராஜூ நம்பிக்கை

காஞ்சிபுரம், மே.03–

நெல்லுக்காரத் தெருவில் அமைந்துள்ள சித்ரகுப்த சுவாமி கோயிலில், திருக்கல்யாண உற்சவம் நடைபெற்றது.

இந்த விழாவில் பங்கேற்று சுவாமி தரிசனம் செய்த முன்னாள் அமைச்சர் கடம்பூர் ராஜூவுக்கு கோயில் நிர்வாகம் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்களிடம் அவர் பேசியதாவது: கடந்த ஏப்.23ம் தேதி நடந்த தேர்தலிலேயே மக்கள் தங்களது தீர்ப்பை வழங்கிவிட்டனர். அந்தத் தீர்ப்பு அதிமுகவுக்கு சாதகமாக இருக்கும்.

இந்தத் தேர்தலில் 200க்கும் மேற்பட்ட தொகுதிகளைக் கைப்பற்றி அதிமுக மீண்டும் ஆட்சி அமைக்கும். பேரறிஞர் அண்ணாவுக்குப் பிறகு, கட்சித் தொடங்கித் தொடர்ந்து வெற்றி பெற்றவர் புரட்சித் தலைவர் எம்ஜிஆர் மட்டுமே.

அதிமுகவின் வாக்குச் சதவீதத்தை யாராலும் கைப்பற்ற முடியாது என்ற நிலையோடு தேர்தல் முடிவுகள் வரும்” என்றார்.

# நூல் விலை ரூ.7 உயர்வு; ஐந்து மாதத்தில் ரூ.41 அதிகரிப்பு: தொழில் துறையினருக்கு பேரிடி

திருப்பூர், மே.03–

நூல் விலை ரூ.7 உயர்த்தப்பட்டுள்ளது. இது தொழில் துறையினருக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தமிழகத்தின் மேற்கு மண்டலங்களான கோவை, ஈரோடு, திருப்பூர், கரூர் உள்ளிட்ட மாவட்டங்களில் ஜவுளி, ஆயத்த ஆடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி பிரதான தொழிலாக இருந்து வருகிறது. திருப்பூரில் மட்டும் ஆயத்த ஆடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி சார்ந்த தொழில் நிறுவனங்கள் பல்லாயிரக்கணக்கில் செயல்பட்டு வருகின்றன. இந்தியாவிலிருந்து பல்வேறு நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யக்கூடிய ஆயத்த ஆடைகளின் சுமார் 68 சதவீதத்திற்கும் அதிகமான உற்பத்தி திருப்பூரில் நடைபெற்று வருகிறது.

ஆயத்த ஆடை உற்பத்தியில் முக்கிய பங்காற்றுவது நூல் ஆகும். பருத்தி விலையை பொறுத்து நூல் விலையில் அவ்வப்போது மாற்றங்கள் இருக்கும். கடந்த பிப்ரவரி நூல் விலை ரூ.7 உயர்ந்திருந்தது. இதைத் தொடர்ந்து மார்ச் 16ம் தேதி மேலும் ரூ.7 அதிகரித்தது. இந்நிலையில், ஏப்ரல் 1ம் தேதி நூல் விலையை 10 ரூபாய் உயர்த்தி வெளியிடப்பட்டது. கடந்த 16ம் தேதி மீண்டும் அனைத்து ரக நூல்களுக்கும் ரூ.10 உயர்த்தி நூற்பாலைகள் அறிவிப்பு வெளியிட்டுள்ளது. இதன் காரணமாக இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து இதுவரை சுமார் ரூ.34 வரை நூல் விலை உயர்ந்திருப்பதால், பின்னலாடை உற்பத்தி துறையினர் அதிர்ச்சியில் இருந்தனர்.

தற்போது நடப்பு (மே) மாதத்திற்கான நூல் விலையை நூற்பாலைகள் அறிவித்துள்ளது. அதன்படி, அனைத்து ரகங்களுக்கும் ரூ.7 உயர்த்தி விலையை அறிவித்துள்ளது. இதனால் கடந்த 5 மாதத்தில் மட்டும் நூல் விலை ரூ.41 உயர்ந்துள்ளது. ஈரான், இஸ்ரேல் போர் காரணமாக கச்சா எண்ணெய் விலை உயர்ந்ததால், பாலிஸ்டர் நூல் மற்றும் துணிகளின் விலை உயர்ந்து வரும் இச்சூழ்நிலையில் மீண்டும் நூல் விலை உயர்வடைந்துள்ளது தொழில்துறையினரிடையே பெரும் அதிருப்தியை ஏற்படுத்தி உள்ளது.


இது குறித்து தொழில்துறையினர் கூறுகையில், பின்னலாடை உற்பத்திக்கான மிக முக்கிய மூலப்பொருளான நூல் விலை கடந்த 5 மாதத்தில் 41 ரூபாய் வரை உயர்ந்துள்ளது பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. ஐந்து மாநில தேர்தலுக்குப் பிறகு நிவாரணம் கிடைக்கும் என எதிர்பார்த்திருந்த நிலையில், தேர்தல் முடிவுகளுக்கு முன்பாகவே நூல் விலை உயர்ந்திருப்பது அதிர்ச்சிகரமாகவே உள்ளது என்றனர்.

# தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி அருகே ஜம்புலிபுத்தூர் நரசிங்கப் பெருமாள் கோவில் தேரோட்டம் நிறைவு: தேர் நிலைக்கு வந்ததால் பக்தர்கள் பரவசம்

ஆண்டிபட்டி, மே. 03–

தேனி மாவட்டம், ஆண்டிபட்டி அருகே உள்ள ஜம்புலிபுத்தூர் கதலி நரசிங்கப் பெருமாள் கோவில் தேரோட்டம், இரண்டாம் நாள் உற்சவத்துடன் நிறைவடைந்து தேர் நிலையை அடைந்தது. இதில் திரளான பக்தர்கள் கலந்துகொண்டு பக்தி பரவசத்துடன் சாமி தரிசனம் செய்தனர்.

பிரசித்தி பெற்ற இக்கோவிலின் சித்திரைத் திருவிழா கடந்த மாதம் கொடியேற்றத்துடன் தொடங்கியது. விழா நாட்களில் தினமும் ஸ்ரீதேவி, பூதேவி சமேத கதலி நரசிங்கப் பெருமாள் பல்வேறு வாகனங்களில் வீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார். விழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம்



நேற்று முன்தினம் தொடங்கியது.

முதல் நாள் தேரோட்டத்தின் போது வடக்குத் தெருவில் தேர் நிறுத்தப்பட்டது. அதனைத் தொடர்ந்து, இரண்டாம் நாளான நேற்று பக்தர்கள் "கோவிந்தா... கோவிந்தா..." என விண்ணதிர முழக்கமிட்டு தேரை வடம் பிடித்து இழுத்தனர். முக்கிய வீதிகள் வழியாக வந்த தேர், கோவிலின் முன்பாக உள்ள நிலையை வந்தடைந்தது.

தேர் நிலையை அடைந்ததும், அங்கிருந்த பக்தர்கள் பக்தி பரவசத்துடன் வாழைப்பழம், நாணயங்கள், பருத்தி மற்றும் இனிப்புப் பதார்த்தங்களை மக்கள் கூட்டத்தில் வீசி தங்களது நேர்த்திக்கடனைச் செலுத்தினர். பின்னர் சுவாமிக்கு மகா தீப ஆராதனை காட்டப்பட்டு, பக்தர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

திருவிழாவின் இறுதி நிகழ்வாக நாளை சுவாமி பூப்பல்லக்கில் பவனி வரும் நிகழ்ச்சி நடைபெற உள்ளது. அதனைத் தொடர்ந்து சப்தாவர்ணம் சாத்தப்பட்டு விழா அதிகாரப்பூர்வமாக நிறைவடையும். இதற்கான ஏற்பாடுகளை கோவில் செயல் அலுவலர் தலைமையிலான விழா குழுவினர் மற்றும் ஊர் பொதுமக்கள் சிறப்பாக செய்திருந்தனர்.



# புளியங்குடி லட்சுமி நரசிங்கப் பெருமாள் கோவிலில் நரசிம்ம ஜெயந்தி விழா

புளியங்குடி மே.03-
தென்காசி மாவட்டம் புளியங்குடியில் அமைந்துள்ள புகழ்பெற்ற அருள்மிகு ஸ்ரீ லட்சுமி நரசிங்கப் பெருமாள் திருக்கோவிலில், நரசிம்ம ஜெயந்தியை முன்னிட்டு சிறப்பு திருமஞ்சன பூஜை மற்றும் வழிபாடுகள் வெகுவிமரிசையாக நடைபெற்றது. நரசிம்ம ஜெயந்தி தினமான (30.04.2026,) வியாழக்கிழமை), சுவாமிக்கு சிறப்பு வழிபாடுகள் கீழ்க்கண்டவாறு நடைபெற்றன. மாலை 5.00 மணிக்கு மங்கள இசையுடன் விழா தொடங்கியது. அதனைத் தொடர்ந்து, உற்சவ மூர்த்தி திருக்கோவில் பிரகாரத்தில் வலம் வரும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை கோவில் நிர்வாகத்தினர் மற்றும் அருணாச்சலம் , ஆவுடையப்பன், சன்ஸ் கட்டளைதாரர் ஆகியோர் சிறப்பாகச் செய்திருந்தனர்.

சிவாச்சாரியார்கள் சங்கர ராமசாமி (என்ற) சந்தோஷ், விஜயன் மற்றும் அருண் ஆகியோர் வேத மந்திரங்கள் முழங்கப் பூஜைகளை முன்னின்று நடத்தினார்கள். விழாவில் கலந்து கொண்ட ஏராளமான பக்தர்களுக்குக் கோவில் சார்பாகப் பிரசாதங்கள் வழங்கப்பட்டன. திரளான பக்தர்கள் நீண்ட வரிசையில் நின்று "கோவிந்தா" கோஷம் முழங்க சுவாமி தரிசனம் செய்தனர்.

# தூய்மைப் பணியாளர்களுக்குப் பதக்கம்; நோயாளிக்கு மறுவாழ்வு! மே தினத்தில் அசத்திய மக்கள் பொது மனித சமூக சேவை அறக்கட்டளை

திருப்பூர் மே 03-
உழைப்பாளர் தினத்தை வெறும் விடுமுறை தினமாகப் பார்க்காமல், உழைப்பவர்களையும் நலிந்தவர்களையும் போற்றும் தினமாக மக்கள் பொது மனித சமூக சேவை அறக்கட்டளை (MPSS) மாற்றிக் காட்டியுள்ளது.*தூய்மைப் பணியாளர்களுக்கு கௌரவம்:*நிறுவனர் வினோத்குமார் ஆலோசனையின் படி நடைபெற்ற இந்த விழாவில், மாநகராட்சி தூய்மைப் பணியாளர்களுக்குப் பொன்னாடை அணிவித்து, மெடல் வழங்கி கௌரவிக்கப்பட்டது. மேலும், பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கிக் கொண்டாடப்பட்டது. இந்த நற்பணிக்கு



உறுதுணையாக இருந்த சாலை போக்குவரத்து காவல்துறை அதிகாரிக்கு நினைவு கேடயம் வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

*மனிதாபிமான உதவி (சிறுநீரகப் பாதிப்பு):*

தன்னுடைய இரு சிறுநீரகங்களையும் இழந்து தவித்த கார்த்திக் என்பவருக்கு இந்த அமைப்பு பேருதவி செய்துள்ளது. அவருக்குத் தேவையான மளிகைப் பொருட்கள் மற்றும் நிதியுதவி வழங்கப்பட்டதோடு, ஷிஸிவி கலர்ஸ் மாரிகிருஷ்ணன் மற்றும் சவுத் ரோட்டரி சங்கப் பொருளாளர் பினு ஆகியோரின் ஒத்துழைப்புடன் அவருக்கு இலவசமாக டயாலிசிஸ் செய்வதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.மாநில தொழிற்சங்கத் தலைவர் வெள்ளையன், தலைமை நிர்வாகிகள், மகளிர் அணி தலைவிகள் மற்றும் உறுப்பினர்கள் திரளாகக் கலந்துகொண்டனர். புதிய உறுப்பினர்களுக்கு அடையாள அட்டைகளும் இதன் போது வழங்கப்பட்டன. "உதவி தேவைப்படும் எவரும் எமது அமைப்பை அணுகலாம்" என்று நிறுவனர் வினோத்குமார் உருக்கமான வேண்டுகோளை விடுத்துள்ளார்.



■ தென்காசி மாவட்டம் கொடிக்குறிச்சி ஸ்ரீராம் நல்லமணி யாதவா கல்லூரி வாக்கு எண்ணிக்கை மையத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே. கமல்கிஷோர், இ.ஆ.ப. மேற்கொண்டுள்ள பாதுகாப்பு ஏற்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சீ.ஜெயசந்திரன் உள்ளார்.



■ மதுரை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் கே.ஜே.பிரவீன்குமார், தலைமையில், திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதிக்கான வாக்கு எண்ணும் பார்வையாளர் கிருத்யா நந்த் ரஞ்சன் முன்னிலையில், மாவட்டத்தில் உள்ள வாக்கு எண்ணும் மையங்களில் பணிபுரியவுள்ள வாக்கு எண்ணிக்கை மேற்பார்வையாளர்கள், உதவியாளர்கள் மற்றும் நுண் பார்வையாளர்கள் ஆகியோர்களுக்கு பணி ஒதுக்கீடு செய்வது தொடர்பாக இரண்டாம்கட்ட சுழற்சி முறை (Randomization) மேற்கொள்ளப்பட்டது.

# சத்தீஸ்கரில் கண்ணிவெடியை அகற்றும்போது ஐஇடி வெடித்து 3 டிஆர்ஜி வீரர்கள் உயிரிழப்பு

கான்கேர்:மே 03-
சத்தீஸ்கர் மாநிலம் கான்கேர் மாவட்டத்தில் இன்று (சனிக்கிழமை) நடைபெற்ற கண்ணிவெடி அகற்றும் பணியின்போது, ஐஇடி வெடிபொருள் வெடித்ததில், டிஆர்ஜி மாவட்டக் காவல் படையை சேர்ந்த மூன்று வீரர்கள் உயிரிழந்தனர், ஒருவர் படுகாயமடைந்தார்.



கான்கேர் நாராயண்பூர் எல்லைக்கு அருகே உள்ள பகுதியில் கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக சோட்டேபேத்தியா காவல் நிலையத்திலிருந்து ஒரு குழு அங்கு அனுப்பப்பட்டது. அங்கே மாவோயிஸ்டுகளால் முன்னரே புதைக்கப்பட்ட ஒரு ஐஇடி வெடிபொருளை செயலிழக்கச் செய்யும் முயற்சியின்போது அது தற்செயலாக வெடித்து சிதறியது. இந்தத் தீவிர வெடிப்பில் 4 டிஆர்ஜி வீரர்கள் படுகாயமடைந்தனர்.

படுகாயமடைந்தவர்களில், ஆய்வாளர் சுக்ராம் வட்டி, காவலர்கள் கிருஷ்ணா கோம்ரா மற்றும் சஞ் சய் கத்வாலே ஆகிய மூவரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். படுகாயமடைந்த மற்றொரு காவலரான பரமானந்த் கோம்ராவுக்கு தற்போது மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இது குறித்து பேசிய பாஸ்டர் சரகக் காவல் துறைத் தலைவர் பி.சுந்தர்ராஜ் கூறும்போது, “கடந்த சில மாதங்களாக, உளவுத் துறை தகவல்கள் மற்றும் சரணடைந்த மாவோயிஸ்ட் தொண்டர்கள் அளித்த தகவல்களின் அடிப்படையில், பாதுகாப்புப் படை யினர் இப்பகுதியில் நூற்றுக்கணக்கான ஐஇடிகளை வெற்றிகரமாகக் கண்டெடுத்துச் செயலிழக்கச் செய்தனர். இருப்பினும், இப்பகுதியை மேலும் பாதுகாப்பானதாக மாற்றும் தொடர் முயற்சியின்போது இந்த துயரமான விபத்து நடந்தது” என்று தெரிவித்தார்.



■ தென்காசி இ.சி.ஈ.அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் இளைஞர் நலன் (ம) விளையாட்டு மேம்பாட்டுத்துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம்,கோடைகால பயிற்சி முகாம்2026 நிறைவு நாளில் மாணவ, மாணவிகளுக்கு பங்கேற்பு சான்றிதழ்களை மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் (லஞ்சம் (ம) ஊழல் தடுப்புப்பிரிவு) மதியழகன் வழங்கினார். உடன் மாவட்ட விளையாட்டு (ம) இளைஞர் நலன் அலுவலர் ச.ராஜேஷ் உள்ளார்.



■ தமிழ்நாடு கேரளா மாநில எல்லையில் அமைந்துள்ள மங்களாதேவி கண்ணகி அம்மன் கோவில் சித்திரை முழுநிலவு திருவிழா தேனி மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் விமர்சியாக 01/05/2026 கொண்டாடப்பட்டது

# “ஜனநாயக சீர்குலைவு” மேற்கு வங்கத்தின் ஃபால்டா தொகுதியில் மறுதேர்தல் நடத்த உத்தரவு

கொல்கத்தா: மே 03-
மேற்கு வங்கத்தின் தெற்கு 24 பர்கானாஸ் மாவட்டத்தில் உள்ள ஃபால்டா சட்டப்பேரவைத் தொகுதி முழுவதும் மறுதேர்தல் நடத்த இந்திய தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, ஃபால்டா தொகுதியில் உள்ள 285 வாக்குச்சாவடிகளிலும் புதிய வாக்கெடுப்பு நடத்தப்படும். ஏப்ரல் 29 அன்று நடைபெற்ற இரண்டாம் கட்டத் தேர்தலின் போது இத்தொகுதியில் பரவலான முறைகேடுகள் நடந்ததாகப் புகார்கள் எழுந்த நிலையில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

ஃபால்டா தொகுதியில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களின் பொத்தான்கள் டேப் கொண்டு மறைக்கப்பட்டதாகவும், வாக்குச்சாவடி ஆக்கிரமிப்பு மற்றும் வன்முறை சம்பவங்கள் நிகழ்ந்ததாகவும் பல்வேறு தரப்பிலிருந்து புகார்கள் குவிந்தன. குறிப்பாக, பாஜக இத்தகைய முறைகேடுகளை முன்வைத்து அந்தத் தொகுதியில் மறுதேர்தல் நடத்தக் கோரிக்கை



விடுத்திருந்தது. தேர்தல் ஆணையத்தின் சிறப்புப் பார்வையாளர் அளித்த அறிக்கையின் அடிப்படையில், மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் கீழ் அத்தொகுதியின் முந்தைய வாக்கெடுப்பு செல்லாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில், இன்று (மே 2) தெற்கு 24 பர்கானாஸ் மாவட்டத்தின் மற்ற இரு தொகுதிகளான மகரஹாத் பாஸ்சிம் மற்றும் டயமண்ட் ஹார்பர் ஆகியவற்றில் தேர்தல் ஆணையம் ஏற்கனவே உத்தரவிட்டிருந்த நிலையில் மறுவாக்குப்பதிவு அமைதியான முறையில் நிறைவடைந்தது. ஃபால்டா தொகுதியில் மட்டும் தொகுதி முழுவதும் மறுவாக்குப்பதிவு நடத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

தேர்தல் ஆணையத்தின் அதிகாரபூர்வ உத்தரவின்படி, ஃபால்டா தொகுதியில் மே 21ஆம் தேதி அன்று காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை மறுவாக்குப்பதிவு நடைபெறும். இதனைத் தொடர்ந்து, அங்குப் பதிவான வாக்குகள் மே 24ஆம் தேதி அன்று எண்ணப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஜனநாயக நடைமுறைகளைச் சீர்குலைக்கும் வகையில் தீவிர தேர்தல் விதிமீறல்கள் நடந்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ள ஆணையம், துணை வாக்குச்சாவடிகள் உட்பட அந்தத் தொகுதிக்கு உட்பட்ட அனைத்து மையங்களிலும் இந்தத் தேர்தல் மீண்டும் நடத்தப்படுவதை உறுதி செய்துள்ளது.

# வாக்கு எண்ணிக்கை தொடர்பான திரிணமூல் காங். வழக்கை தள்ளுபடி செய்தது உச்ச நீதிமன்றம்

புதுடெல்லி:மே 03-
மேற்கு வங்க சட்டப்பேரவைத் தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணியில் மத்திய அரசு பணியாளர்கள் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் பணியாளர்களும் ஈடுபடுத்தப்படுவார்கள் என்ற தேர்தல் ஆணையத்தின் சுற்றறிக்கைக்கு எதிராக திரிணமூல் காங்கிரஸ் கட்சி தொடர்ந்த மேல்முறையீட்டு மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.மேற்கு வங்கம் உட்பட 5 மாநிலங்களில் நடைபெற்ற தேர்தலில் பதிவான வாக்குகள் வரும் 4ம் தேதி எண்ணப்பட உள்ளன.மேற்கு வங்கத்தில் தேர்தல் எண்ணும் பணியில் மாநில அரசு பணியாளர்களோடு, மத்திய அரசுப் பணியாளர்களும், பொதுத்துறை நிறுவனங்களின் பணியாளர்களும் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று தேர்தல் ஆணையம் கடந்த ஏப்ரல் 13ம் தேதி சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டது. இந்த சுற்றறிக்கைக்கு எதிராக



திரிணமூல் காங்கிரஸ் கட்சி கல்கத்தா உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தது. இந்த மனுவை, உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்ததை அடுத்து, உச்ச நீதிமன்றத்தில் மேல் முறையீடு செய்யப்பட்டது. இந்த மனு நீதிபதிகள் பி.எஸ். நரசிம்மா, ஜாய்மால்யா பஷி ஆகியோர் அடங்கிய அமர்வு முன் விசாரணைக்கு வந்தது. திரிணமூல் காங்கிரஸ் மற்றும் தேர்தல் ஆணையத்தின் வாதங்களைக் கேட்ட நீதிபதிகள், “வாக்கு எண்ணும் பணியாளர்களைத் தேர்வு செய்யும் அதிகாரம் தேர்தல் ஆணையத்துக்கு உண்டு. தேர்தல் ஆணையம் வெளியிட்ட சுற்றறிக்கையை தவறு என்று கூற இயலாது. மத்திய, மாநில அரசு ஊழியர்களின் கலவையை உள்ளடக்கியதாகவே அந்த சுற்றறிக்கை தெளிவாக உள்ளது. ஏதேனும் முறைகேடுகள் நடக்கக் கூடும் என்று திரிணமூல் காங்கிரஸ் கொண்டிருக்கும் அச்சம் தேவையற்றது. அந்த சுற்றறிக்கை அதன் முழுமையான நோக்கத்துடனும் உணர்வுடனும் செயல்படுத்தப்படும் என்று தேர்தல் ஆணையம் உறுதியளித்துள்ளது. எனவே, திரிணமூல் காங்கிரஸ் தொடர்ந்த மனு தள்ளுபடி செய்யப்படுகிறது” என உத்தரவிட்டனர்.










SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003,
Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000